Registered No. M. 4018.

உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 7 | June 1945 | No. 6

விஷய சூசிகை. பக்கம்

திராவிட வைத்யமண்டலம் 1

நிகிலபாரத ஆயுர்வேத மண்டலத்தலைவர்
அவர்கள் சுற்றுப்பிரயாணம் 1—4

போகரத்நாகரம் 21—26

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher

5, West Masi Street, Madura.

காபிரைட்] [விலை 0—3—0

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை—45.

JL
L:5M2UM25C
N45.7.6;1
210245

திராவிட வைத்ய மண்டலம் கரூர்.

ஷை மண்டலத்தின் நிரந்தர சபைக்கூட்டம் 25—5—45 அன்று திருச்சி சின்னக்கடைத்தெரு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீரங்கம் டாக்டர் வி. சுப்ரமண்யம் அவர்கள் தலைமை வகித்தார்கள், கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின. (1) திராவிட வைத்யமண்டலத்தின் காரியக்கமிட்டியின் பொது காரியதரிசியும் மற்ற முக்ய செயலாளர்களும் எல்லா ஜில்லாக்களிலும் தாலூகாக்களிலும் கிளைகள் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டியது. இதற்கிடையில் இப்பொழுதிருக்கும் ஆயுர்வேத சபைகளும் அவைகளால் இயன்றவரை ஒத்துழைத்து ஷை காரியத்தை வெற்றிகரமாக்க முயற்சிக்கவேண்டும் 2 திருச்சி ஆயுர்வேத சபையை மண்டலத்துடன் சேர்க்கும் விஷயம் ஒத்திவைக்கப்பட்டது. (3) சபையின் பொதுக்காரியதரிசி "வைத்யசந்திரிகா" பத்திரிகையை மண்டலத்தின் உத்யோக முறை பத்திரிகையாக மாற்றவும் அதற்காக ஒரு எடிடோரியல் போர்ட்நிறுவவும் வேண்டியவைகளைச்செய்ய முழு அதிகாரம் கொடுக்கப்பட்டது. (4) அகில இந்திய ஆயுர்வேத வித்யாபீட பரீக்ஷைகளுக்கு மாணவர்களை தயார்செய்ய கரூரில் ஒரு ஸ்தாபனம் நிறுவும் எண்ணத்தை கமிட்டி மனப்பூர்வமாக ஆதரிக்கின்றது, இந்த விஷயத்தை கவனிக்கும்படி பொதுக்காரியதரிசி கேட்டுக்கொள்ளப்படுகிறார். அவருக்கு உதவிசெய்ய டாக்டர் வி. பி. நடராஜ சாஸ்திரிகள், பண்டிட் எஸ். நாராயண அய்யங்கார், டாக்டர் பி. எஸ். ராமசர்மா, டாக்டர் A. ராகவராவ், டாக்டர் V. சுப்பிரமணியம் ஆகியவர்களடங்கிய ஒரு சங்கம் நிறுவப்பட்டது; (5) மகாமண்டலத்தலைவரிடமிருந்து திராவிட வைத்யமண்டலத்தை நிகிலபாரதிய ஆயுர்வேத மகாமண்டலத்தின் தமிழ்நாட்டு கிளைஸ்தாபனமாக மாற்றி அமைக்கும்படி வந்த 3—5—45 தேதியுள்ள 615 நிர் கடிதத்தை அங்கீகாரம் செய்துகொண்டு, தற்சமயம் மகாமண்டலத்துடன் இணைக்கப்பட்ட ஸ்தாபனமாக இருப்பதை கிளை ஸ்தாபனமாக மாற்றும்விஷயத்தை யோசித்து முடிவுசெய்ய இந்த மண்டலம் அடுத்த சம்மேளனத்திற்கு சிபார்சு செய்கிறது. (6) கவர்ன்மெண்டார் போஸ்ட்வார் பொது சுகாதார கமிட்டியில் இந்தியவைத்யத்தின் பிரதிநிதிகளை சேர்த்துக்கொண்டதற்கு வந்தனம் தெரிவித்துக்கொள்வதுடன் போஸ்ட்வார் பொதுக்கமிட்டியிலும் பிரதிநிதிகளை சேர்த்துக்கொள்ளும்படி (சப் கமிட்டியின் சிபார்சுகளை இவர்கள் விளக்கமுடியுமாதலால்) கவர்ன்மெண்டை கேட்டுக்கொள்வதாக தீர்மானிக்கப்பட்டது. ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ வி. வி. நடராஜ சாஸ்திரிகள் கூறிய வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

காரியதரிசி.

நிகில பாரத ஆயுர்வேத மண்டலத் தலைவர் வைத்ய வாசஸ்பதி M. K. முக்கர்ஜி அவர்களின் தென் இந்தியா சுற்றுப்பிரயாணம்.

பெங்களூரில் இருக்கும்பொழுது கொச்சி சமஸ்தான அரசாங்கத்தார் அனுப்பிய கடிதத்திலிருந்து, தலைவர் அவர்கள் சமஸ்தானத்தின் விருந்தாளியாக அழைக்கப்பட்டார் என்பது தெளிவாக விளங்காத காலையில், கேரள ஆயுர்வேத கார்பொரேஷனுக்கு ஓர் கடைசி நிமிஷ தந்தி கொடுத்துவிட்டு தலைவர் அவர்கள் எர்ணாகுளத்திற்குப் பிரயாணமானார். அந்த கார்பொரேஷனின் மேனேஜிங் டைரக்டர் தலைவர் அவர்களை வரவேற்க பெஜவாடா வந்திருந்தார். அவர் அங்கு வந்துசேர்ந்தது தெரிந்ததும் கொச்சி சமஸ்தானத்தார் அவரை முறைப்படி வரவேற்று கேரள ஆயுர்வேதகார்பொரேஷனின் விருந்தாளியாக்கினார்கள். அதிலிருந்து சமஸ்தானத்தாருடையவும் கார்பரேஷன் காரர்களுடையவும் ஆதரவுடன் தலைவர் அவர்களின் காரியங்கள் வெற்றிகரமாக நடந்தன. ஜனவரி மீ 20உ முதல் சுருசுருப்பாக வேலை தொடங்கப்பட்டது. அரசாங்கத்தின் கூட்டு காரியதரிசி மாத்யூவுடன் சம்பாஷணை முதலில் நடந்தது, ஸ்ரீ மாத்யூ தலைவர் அவர்கள் சமஸ்தானத்தில் உள்ள ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளை பார்வையிட எற்பாடுகள் செய்தார். டாக்டர் மேனன் அவர்களை சூப்பிரண்டெண்டாக கொண்ட திருச்சூரிலிருக்கும் தலைமை காரியாலயத்துடன் உள், வெளிதொடர்புகளுடைய இருபது சிறு ஆஸ்பத்திரிகள் பார்வையிடப்பட்டன. இந்த ஆஸ்பத்திரிகள் நன்கு அமைக்கப்பட்டு வேண்டிய வசதிகளுடன் கூடியதாகவும் தலைவர் அவர்களால் காணப்பட்டது. இவற்றில் சிலவற்றுடன் வியாபார இலாகாக்களும் அமைக்கப்பட்டிருந்தன இவைகளில் சமஸ்தான ஆயுர்வேத பார்மஸி உற்பத்தி செய்த மருந்துகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஜனவரி 23உ ஆஸ்தான பந்திரி தலைவர் அவர்களை பேட்டிகாண அழைத்தார், அம்மந்திரி ஆயுர்வேதத்தில் மிகுந்த பற்றுதல் உடையவராகக் காணப்பட்டார். தனது உத்யோக காலத்திற்குள் சமஸ்தானத்தின் 87 தாலூகாக்களிலும் ஒவ்வொரு ஆயுர்வேத டிஸ்பென்சரியும் ஆஸ்பத்திரியும் எற்படுத்திவிட அபிலாஷை கொண்டுளதாகத்தெரிவித்தார். அவருடன் ஸ்ரீ முக்கர்ஜி வெகுநேரம் ஆயுர்வேத விஷயங்களைப்பற்றி விவாதம் செய்துகொண்டிருந்தார். அந்த சமஸ்தானத்தின் அரசர்களில் பலரும். ஆயுர்வேதத்தில் சிரோமணிகளாத

210245

விளங்கியவர்கள், மந்திரி அவர்களும் ஒருநாள் தன்னுடன் விருந்துக்கு முக்கர்ஜி கோஷ்டியினரை அழைத்தார் இதுமற்றொருநீண்ட சம்பாஷணைக்கு வசதி அளித்தது. திருச்சூர் ஆஸ்பத்திரியில் விஷ சிகிச்சையும் சேர்க்கப்பட்டிருந்தது. கவனிக்கத்தக்கது. ஆயுர்வேதத்தின் பகுதியான அகத தந்திரமும் இன்னும் கேரளத்தில் கிரியாம்சையில் இருக்கின்றது. ரஸ சிகித்சையின் அளவு கேரளத்தேரத்தில் மிகக்குறைவு. ஆனாலும் கேரளத்தில் ஆயுர்வேதத்தின் காந்தி சிறிதும் குன்றாமல் பிரகாசிப்பது மிகவும் போற்றத்தக்கதே. அரசாங்க சமஸ்கிருதக் கல்லூரியிலும் ஆயுர்வேதம் உபதேசிக்கப்படுகின்றது. தலைவர் அவர்கள் அழைக்கப்பட்டு, அங்கு தமது செய்தியை சம்ஸ்கிருதத்தில் தெரிவித்தார். இதற்கிடையில் ஆர்வமுள்ள சமஸ்கிருத பண்டிதரான கொச்சியின் முதல் இளவரசருடனும் ஒரு பேட்டி காணப்பட்டது. 26உயன்று நடந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் தலைவர் அவர்கள் தமது நோக்கங்களையும் ஆயுர்வேத காங்கிரஸின் செய்தியையும் விவரித்தார். கணக்கற்ற கேள்விகளுக்கும் பதிலளித்து விஷயங்களை விளக்கினார். ஆயுர்வேத கார்பரேஷன் காரர்கள் அக்கூட்டத்தில் பிரஸன்னமாயிருந்த கனவான்களுக்கு சிற்றுண்டி விருந்து நடத்தினர். 27உயன்று முக்கர்ஜி அவர்களை கொச்சி சமஸ்தான மகாராஜா பேட்டிக்கழைத்தனர், அந்த சமஸ்தான அரசர்கள் தங்கள் அடக்கத்திற்கும் பெருந்தன்மைகளுக்கும் பெயர்போனவர்கள், அரசனுடன் நடந்த இருதய பூர்வமான சம்பாஷணையில் தலைவர் கொச்சியில ஓர் ஆயுர்வேதகல்லூரி அமைக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். அதற்கான தமது யோசனைகளையும் தெரிவித்தார் சம்பாஷணை முடிவில் முக்கர்ஜி அவர்களுக்கு அளிக்கப்பட்ட வசதிகள் போதுமானவையா என்று கருணையுடன் விசாரித்தார். மறுநாள் முழுவதும் அந்த சமஸ்தானத்திலுள்ள வைத்தியர்களை பேட்டி காண்பதிலேயே கழிந்தது. இதற்காக சமஸ்தான் ஆயுர்வேத சூபரின்டெண்டு எர்ணாகுளம் ஆஸ்பத்திரியை வசதிசெய்து கொடுத்துடன் சமஸ்தான வேலையிலிருந்த வைத்யர்களுக்கு ஒரு நாளைய விடுமுறையும் கொடுத்தது போற்றத்தக்கதாகும். இந்நிகழ்ச்சியை தொடர்ந்த ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் வைத்யராஜ் சங்கர மேனன் எம். ஏ, அவர்களின் தலைமையில தலைவர் ஒரு அரிய உபன்யாசம் செய்தார். அதை சங்கரன் மேனன் அவர்களே மொழிபெயர்த்

தார். கொச்சி ஆயுர்வேத காங்கிரஸை ஸ்தாபனம் செய்ய ஸ்ரீ மேனனை தலைவராகக்கொண்ட ஒரு ப்ரோவிஷனல் கமிட்டி நிறுவப்பட்டது. 29உ விடியற்காலையில் தலைவர் அவர்கள் தமது திட்டத்தில் அடுத்த ஊரான திருவாங்கூர் சமஸ்தானத்தை சேர்ந்த ஆலப்புழைக்கு புறப்பட்டார். ஆலப்புழை வைத்ய சங்கத்தின் பிரதிநிதிகள் முக்கர்ஜி அவர்களை வரவேற்க எர்ணாகுளத்திற்கே வந்திருந்தனர். இங்கு தலைவர் அவர்களும் அவரது கோஷ்டியும் தங்க ஆலேஷ்ய வைத்யசாலா வேண்டிய ஏற்பாடுகள் செய்தது. ஸ்ரீ ஆர். கே. பரமேஸ்வரன் பிள்ளை, திருவாங்கூர் அரசாங்கத்தின் சார்பாக ஸ்ரீ முக்காஜி அவர்களை சந்திக்க ஏற்கனவே வந்திருந்தார். ஸ்ரீ முக்கர்ஜியை திருவாங்கூர் சமஸ்தானத்தார் இப்பொழுது விருந்தாளியாக ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதை விவரித்தார். அப்பொழுது வைஸ்ராய் திருவாங்கூருக்கு வருவதாக இருந்ததால் சமஸ்தானம் வெகு சுறுசுறுப்பாக இருந்தது. ஆகவே தலைவர் அவர்களை அவருடைய காரியங்களை திருவாங்கூர் சமஸ்தானத்தில் பிப்ரவரி மாத மத்தியில் வைத்துக்கொள்ளும்படி ஸ்ரீ பரமேஸ்வரன் பிள்ளை அரசாங்கத்தின் சார்பாகக் கேட்டுக்கொண்டார், இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஸ்ரீ முக்கர்ஜியின் காரியங்களில் அதிக கவனம் செலுத்தமுடியாது என்பது அவர்கள் எண்ணம். இதனால், தலைவர் அவர்களின் பிரயாண திட்டம் வெகுவாக பாதிக்கப்பட்டது. இதனால் தலைவர் அவர்கள் ஒவ்வொரு மகாணத்திலும் வெவ்வேறு சமயங்களில் பலதடவைகள் பிரயாணம் செய்யும்படி நேரிட்டது. கொல்லத்திற்குப் போகும் வழியில் நடுவிலே ஒரு மணிநேரம் கூட தங்கமுடியாததால் காயாங்குளம் நண்பர்கள் ஏமாற்றமடைய நேரிட்டது. ஆலப்புழையில் அந்த ஒரு நாளும் வெகு விறுவிறுப்புடன் கழிந்தது, ஏ. வி. தாமஸ் அண்டு கம்பெனியார், தலைவர் அவர்களால், காலஞ்சென்ற காங்கிரஸ் அங்கத்தினர் டாக்டர் சாமி அவர்களின் குடும்ப உதவிக்காக பேட்டி காணப்பட்டனர். அக்கம்பெனியின் மேனேஜிங் ஏஜெண்டான ஸ்ரீ தாமஸ் அவர்கள் இந்த விஷயத்தை ஏற்கனவே ஆயுர்வேதிக் டிங்க்சர்ஸ் மான்யுபாக்சரிஸ் கம்பெனியார் ஆலோசித்து வருவதாகவும், போதிய உதவியளிக்க ஏற்பாடுகள் நடந்துவருவதாகவும் உறுதி கூறினார். இந்த மாதிரியான குடும்பங்

களுக்கு உதவி அளிக்க ஆயுர்வேத காங்கிரஸும் மும்மரமாக யோசனை செய்ததுதான். ராஷ்டிரபதி ரிலீப் பண்டுக்கும் ஸ்ரீ தாமஸ் தாராளமாக நன்கொடை யளித்த மெச்சத்தக்கதே. பிறகு தலைவர் அவர்கள் ஆயுர்வேதிக் டிங்ச்சர் கம்பெனியை பார்வையிட்டார். அங்கு அவருக்கும் அவரது கோஷ்டியினருக்கும் சிற்றுண்டி உபசாரம் அளிக்கப்பட்டது. டிங்ச்சர் விதங்களில் மாதிரிகள் தலைவர் அவர்களுக்கு கொடுக்கப்பட்டன. வைத்யர்களின் கூட்டமும் பொதுக்கூட்டமும் மாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இங்கிலீஷ் ஹைஸ்கூல் சநாதனதர்ம வித்யாசாலையிலிருந்து வந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு மாணவர்களுக்கு ஹிந்தியில் தலைவர் ஸ்ரீ அவர்கள் பிரசங்கம் செய்தார். அப்பள்ளிக்கூடத்தில் நூற்றுக்கு மேற்பட்ட ஆண் பெண் வித்யார்த்திகள் ஹிந்தி படிப்பது சந்தோஷத்துடன் பார்க்கப்பட்டது. பொதுக்கூட்டமும் நகர முனிசிபல் சேர்மனால் தலைமை வகிக்கப்பட்டு இனிது நடந்தேறியது. தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பலர் ஆயுர்வேத காங்கிரஸின் மெம்பர்களாகச்சேர்ந்தனர். அன்றைய இரவில் முக்ய வைத்யர்கள் தலைவருடன் சம்பாஷணை நடத்தினர். அங்கு பிரசன்னமாயிருந்த கராச்சியைச் சேர்ந்த கல்யாண்ஜி, நாராயணஜி, சுசேடே. சிந்து, ஆயுர்வேத விஷயங்களைப் பற்றி தலைவருடன் விவாதித்தார். மறுநாட் காலை 10 மணிக்குள் மதுரைக்கு ரயிலை பிடிக்கவேண்டியிருந்ததால் மிகுந்த கஷ்டத்துடன் ரயிலில் ஒரு இடம் அமர்த்தப்பட்டது. முதலில் டிக்கட்டே கிடைக்காத நிலைமையாக இருந்தது. கேரள ஆயுர்வேத கார்பரேஷனின் டைரக்டர்களான டாக்டர் பெப்சில், டாக்டர் ஜான் இருவரும் மனமுவந்து கொல்லம்வரை தலைவர் அவர்களுடன் பிரயாணம் செய்தனர். அதே விதமாக ஆயுர்வேத டிங்ச்சர் கம்பெனியை சேர்ந்த மிஸ்டர் ஜான்சனும் ஸ்ரீ வைத்ய பரமேஸ்வரன் பிள்ளையும் மனமுவந்து உதவி புரிந்தனர். எர்ணாகுளத்திலிருந்து 100 மைல்கள் தாண்டி உள்ள கொல்லம்வரை தலைவர் அவர்களையும் அவரது கோஷ்டியையும் தங்களுடைய சொந்த காரில் செளகர்யமாக அனுப்பிவைத்த தனிப்பெரும் பெருமை கொச்சி சமஸ்தானத்திற்கே ஏகபோகமாக உரியதாகும்.

ஆமலக்யாதி—நெல்லிவற்றல், கடுக்காய், திப்பிலி, கொடுவேலி, ஆகிய இவைகளைச் சமயெடை எடுத்து இடித்துக் கஷாயம்செய்து கொடுக்க மலம் இளகும். எல்லாக்காய்ச்சல்களும் விலகும். தீபன பாசன குணமுள்ளது. அமிருதாதி—சீந்தில், வேப்பம்பட்டை, செஞ்சந்தனம், பத்மகாஷ்டம், கொத்தமல்லி விதை, இவைகளைச் சமயெடை எடுத்துக கஷாயம்செய்து சாப்பிட காய்ச்சல், ஓக்காளம், வாந்தி, தாகம், எரிச்சல், அரோசகம், ஆகிய இவை நீங்கும். சின்னோத்பவாதி—சீந்தில், கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சொரி, சுக்கு ஆகிய இவைகளின் கஷாயம் ஜ்வரங்களைப் போக்கும். துல்பர்சாதி—சிறுகாஞ்சொரி, பர்பாடகம், கோரைக்கிழங்கு, நிலவேப்பு, ஆகிய இவைகளின் கஷாயம் சகல ஜ்வரங்களையும் போக்கும். முஸ்தாதி—கோரைக்கிழங்கு, ஆடாதோடை, சுக்கு, சிறுகாஞ்சொரி, ஆகிய இவைகளின் கஷாயம் சகல ஜ்வரங்களையும் போக்கும். அஷ்டகுணமண்டம்—கொத்தமல்லி விதை, திரிகடு, இந்துப்பு, பாசிப்பயறு, இந்துப்பு. இவைகளால் தயாரிக்கப்பட்ட கஞ்சியில் பெருங்காயம் எண்ணெசேர்த்துச் சாப்பிட சகல ஜ்வரங்களுக்கும் நல்லது. இனிவாத பித்தஜ்வரங்களில் கஷாயம் சொல்லப்படுகிறது. பஞ்சபத்ர கஷாயம்—சீந்தில், பர்பாடகம், கோரைக்கிழங்கு, நிலவேப்பு, சுக்கு, இவைகளின் கஷாயம் கொடுக்க வாத பித்தஜ்வரம் சமிக்கும். வைத்ய ஜீவனம் என்ற நூலில் சொல்லப்பட்ட பஞ்சமூல்யாதி—மஹாபஞ்சமூலம், சீந்தில், கோரைக்கிழங்கு, சுக்கு, நிலவேம்பு, இவைகளின் கஷாயம் வாத பித்தஜ்வரத்திற்கு நல்லது. திரிபலாதி—திரிபலை, குமிழ், அரத்தை, சரக்கொன்றை, ஆடாதோடை, இவைகளின் கஷாயம் வாதபித்தஜ்வரங்களைப் போக்கும். இனி வாதகபஜ்வரங்களுக்குக் கஷாயங்கள் சொல்லப்படுகின்றன. ஸிம்ஹியாதி—கண்டங்கத்திரி, ஓமம், சீந்தில், இவைகளைக் கஷாயம்செய்து திப்பிலிப்பொடியைச் சேர்த்துக் கொடுக்க வாத கபஜ்வரங்கள், சுவாஸம், பீனஸம், சூலம், ஆகிய இவை போம். க்ஷுத்ராதி—கண்டங்கத்திரி, சீந்தில், சுக்கு, சாதாகோஷ்டம், இவைகளின் கஷாயம் கபவாதஜ்வரங்களை விலக்கும். ஆரக்வதாதி—சரக்கொன்றைப்புளி, தேசாவரம், கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, கடுக்காய், ஆகிய இவைகளின் கஷாயம் வாதகபஜ்வரங்களைத் தணிக்

210245

கும். முஸ்தாதி—கோரைக்கிழங்கு, பர்பாடகம், சுக்கு, சீந்தில், சிறுகாஞ்சொரி, ஆகிய இவைகளின் கஷாயம் கபவாதஜ்வரம், அரோசகம், வாந்தி, எரிச்சல், ஆகிய இவைகளைப் போக்கும். பூநிம்பாதி—நிலவேம்பு, கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, சீந்தில், சிறுகாஞ்சொரி, பர்பாடகம், சுக்கு, இவைகளின் கஷாயம் வாதகபஜ்வரங்களைப் போக்கும். இனி கபபித்தஜ்வரங்களில் கஷாயம் சொல்லப்படுகிறது. அமிருதாஷ்டகம்—சீந்தில், வேப்பம்பட்டை, கடுகுரோகிணி, கோரைக்கிழங்கு, வெப்பாலைபரிசி, சுக்கு, பேப், புடல், செஞ்சந்தனம், இவைகளின் கஷாயத்தில் திப்பிலிப்பொடி சேர்த்துச் சாப்பிட கபபித்தஜ்வரங்கள், வாந்தி, அரோசகம், ஓக்காளம், எரிச்சல், தாகம், ஆகிய இவைகளைத் தணிக்கும். படோலாதி—பேப்புடல், செஞ்சந்தனம், மருள் கிழங்கு, மலைதாங்கி, கடுகுரோகிணி, சீந்தில், திப்பிலி, ஆகிய இவைகளின் கஷாயம்கபபித்தஜ்வரம் வாந்தி, எரிச்சல், அரிப்பு, ஆகிய இவைகளைப் போக்கும். படோலாதி—பேப்புடல், வேப்பம்பட்டை, திரிபலை, அதிமதுரம், குருந்தொட்டி, ஆகிய இவைகளின் கஷாயம் கபபித்தஜ்வரங்களில்நன்மை செய்யும். திக்தாதி—கடுகுரோகிணி, விலாமிச்சவேர், குருந்தொட்டி, கொத்தமல்லிவிதை, பர்பாடகம், கோரைக்கிழங்கு, இவைகளின் கஷாயம் கபபித்தஜ்வரங்களைப் போக்கும். கண்டகார்யாதி—கண்டங்கத்திரி, சீந்தில், சிறுதேக்கு, சுக்கு, வெப்பாலையரிசி, ஆடாதோடை நிலவேம்பு, செஞ்சந்தனம், கோரைக்கிழங்கு, பேப்புடல் கடுகுரோகிணி, ஆகிய இவைகளின் கஷாயம் கபபித்தஜ்வரங்கள், எரிச்சல், தாகம், அரோசகம், விக்கல், காஸம், பக்கவலி, ஆகிய, இவைகளைப் போக்கும். லோஹித சந்தனாதி—செஞ்சந்தனம், பத்மகம், கொத்தமல்லிவிதை, சீந்தில், வேப்பம்பட்டை, ஆகிய இவைகளின் கஷாயம் கபபித்தஜ்வரங்கள் எரிச்சல், தாகம், வாந்தி, ஆகிய இவைகளைப்போக்கும். அக்னிபலம் உண்டாகும். லாஜமண்டம்—நெல் பொரி அல்லது அரிசிப்பொரி இவைகளில் ஒன்றால் தயாரிக்கப்படும் கஞ்சிக்கு லாஜமண்டம் எனப்பெயர். இது கபபித்தங்களைத் தணிக்கும். பந்தம்செய்யும், தாகம், ஜ்வரம், இவைகளில் நன்மை செய்யும். முதலில் குளிர் வந்து பிறகு காய்ச்சல்வந்தால் அப்பொழுது ஜீரகம், பாகல்வேர், வெட்டிவேர், இவைகளின் கஷாயம் நன்மைசெய்யும். இனி சந்நிபாதஜ்வரங்களில் கஷாயங்கள்

சொல்லப்படுகின்றன. ஷடி ஜ்வரங்களில் முதலில் ஆமமும் கபமும் தணியும்படி சிகித்சைசெய்யவேண்டும். கபம் தணிந்தபிறகு பித்த வாதங்களுக்கு சிகித்சைசெய்யவேண்டும். முதலில் உபவாசம் பிறகு வாலுகாஸ்வேதம், நஸ்யம், கண்டுஷம், அவலேஹம், அஞ்ஜனம், ஆகிய இவைகளை உபயோகிக்கவேண்டும். உபவாஸம்—மூன்று, ஐந்து, அல்லது பத்துநாட்கள் பட்டினிபோடவேண்டும். ஆரோக்யம் வருமளவு பட்டினிபோட வேண்டும். சன்னிபாதங்களில் திரிதோஷ பிரகோபம் ஷடி பட்டினியைத் தாங்குகிறது. திரிதோஷ பிரகோபம் இல்லாவிட்டால் பட்டினியைத் தாங்கமுடியாது ஜ்வரம் ரஸதாதுவைப்பற்றி நின்றால் ரஸசுத்தியும், ரக்ததாதுவைப்பற்றியிருந்தால் ரக்தமோக்ஷமும், மாமிசத்தில் இருந்தால் விரேசனமும், மேதஸ்ஸில் இருந்தால் மேதோஹர சிகித்சையும், அஸ்தியில் இருந்தால் வமனம், விரேசனம், ஸ்வேதம் மர்தனம், ஆகிய இவைகளைச் செய்யவேண்டும். மஜ்ஜை, சுக்லம், ஆகிய இவைகளைப்பற்றினால் அது அஸாத்யமாகும். ஒரு சிகித்சைசெய்து அதில் குணம் காணப்படாவிட்டால் வேறு சிகித்சை செய்யவேண்டும். முதலில் செய்த சிகித்சையில் மருந்தின்வேகம் தணிந்தபிறகே வேறு சிகித்சை செய்யவேண்டும். முன் கொடுத்த மருந்தின்வேகம் தணியாமலிருக்கும்போதே வேறு மருந்தைக் கொடுத்து ஸங்கரம் செய்யக்கூடாது. சன்னிபாதஜ்வரங்களில் தாலு முதலிய ஐந்து இடங்களில் இரும்புகம்பியால் சூடுபோடுதல். ருத்ராபிஷேகம், பிராமணபோஜனம், நவக்கிரஹ ஜபம், மந்திர ஜபங்கள், ரக்ஷைசெய்தல், முதலியன நன்மைசெய்யும். ஸந்நிபாதஜ்வரங்களில் பாசனம் சொல்லப்படுகிறது. கண்டகார்யாதி—கண்டங்கத்திரி, முள்ளி, சுக்கு, கொத்தமல்லிவிதை, தேவதாரு, இவைகளின் கஷாயம் சன்னிபாதஜ்வரங்களில் பாசனமாகும். வாலுகாஸ்வேதம்——மணலை ஓர் இரும்புச்சட்டியிலிட்டு அடுப்பேற்றி வறுத்து ஓர் துணியில்போட்டு அதில் சற்று காடியைத்தெளித்து ஒற்றடம் கொடுப்பது வாலுகாஸ்வேதமாகும். இது வாதகபங்களையும் தலைவலியையும் உடம்புவலியையும் தணிக்கும். நஸ்யம்—கொம்மட்டி மாதளைச்சார், இஞ்சிச்சார், இவைகளைச் சமஎடை எடுத்து சற்று உஷ்ணப்படுத்தி அதில் இந்துப்பு, பிடாலவணம்,

சௌவர்சலம், ஆக இந்த மூன்று உப்புகளையும் சமயெடை எடுத்துப்பொடிசெய்து ஷெ சாரில் போட்டு இரண்டு மூக்கு துவாரங்களிலும் இரண்டு அல்லது மூன்று சொட்டுகள் விடவும், மேலும் நஸ்ய பிரகரணத்தில் சொல்லப்பட்ட மற்ற தீக்ஷ்ண நஸ்யங்களுள் ஏதாவது ஒன்றைச் செய்யலாம். இவ்விதம் நஸ்யம் செய்வதால் கபம் உடைந்து வெளியேறும். தலை, மார்பு, கழுத்து, தொண்டை, வாய், இவைகளில் வலி, பக்கவலி, ஆகிய இவை நீங்கும். மதூகாதி நஸ்யம்—இலுப்பை வைரம், இந்துப்பு, சைம்பு, மிளகு, திப்பிலி. இவைகளைச் சமயெடை எடுத்து தண்ணீர்விட்டரைத்து இரண்டு நாசிகளிலும் இரண்டுசொட்டு ரஸம் பிழிபவும், ஸைந்தவாதி—இந்துப்பு, வெள்ளை மிளகு, கடுகு, கோஷ்டம். திப்பிலி, இவைகளைச் சமயெடை எடுத்து ஆட்டு மூத்திரத்தால் அரைத்து முன்போல செய்யவும். கண்டுஷம்—இஞ்சிரஸத்தில் இந்துப்பு, திரிகடு, இவைகளைப் பொடிசெய்துபோட்டு வாய்நிறைய விட்டுக்கொண்டு பிறகு துப்பிவிட்டு அடிக்கடி காரி உமிழ்ந்துவரவும். இவ்விதம் செய்வதால் மார்பு, சிரஸு. தொண்டை, கழுத்தின் இருபார்சுவங்கள், ஆகிய இவைகளில் உறைந்துள்ள கபம் வெளியாகும். அவலேஹம்—கட்பலம், சாதாகோஷ்டம், கடுக்காய்ப்பூ. திப்பிலி, இவைகளைச்சமயெடை எடுத்துப் பொடிசெய்து அரைத்தோலா முதல் ஒரு தோலாவரை ஷெ பொடியை எடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட சுவாஸம், காஸம், ஜ்வரம், ஆகிய இவை நீங்கும், கபத்தைப்போக்கும். அஷ்டாங்காவலேஹம்—கட்பலம், சாதாகோஷ்டம், கர்காடக சிருங்கி, திரிகடு, சிறுகாஞ்சொரி, ஓமம், ஆகிய இவைகளைச்சமயெடை எடுத்து முன்போல செய்து உபயோகிக்க சன்னி, விக்கல், தொண்டையடைப்பு, முதலியன விலகும். கபம் மிகுந்த நிலைமையில் ஷெ அவலேகத்தை இஞ்சி ரஸத்துடன் சாப்பிடவேணடும். அஞ்ஜனம்—முருங்கைவிதை, திப்பிலி, மிளகு, இந்துப்பு, உள்ளிப்பூண்டு, கடுக்காய், வசம்பு, இவைகளைச் சமயெடை எடுத்து கோமூத்திரத்தால் அரைத்து கடுகளவு கண்களில் இடவும். கஸ்தூரி, மிளகு, குதிரை உமிழ்நீர், இவைகளை அரைத்து தேனில் குழைத்துக் கண்களிலிடவும். மனோசிலையை குதிரை உமிழ்நீரால் அரைத்துக்கண்களிலிட சோம்பல் போம். உத்தூளனம்—அதா

வது சன்னிபாதங்களில் காணும் வியர்வையைத் தணிக்க உடம்பில் இடவும் மருந்துக்கு உத்தூளனமெனப்பெயர். வேகவைத்த கடுங்காய்த்தோல், கருவேலம் தழை, இவைகளைச் சமயெடை எடுத்து இடித்துப்பொடி செய்து அந்தப்பொடியை உடம்பு முழுவதும் தூவவேண்டும், வியர்வை அடங்கும். பூநிம்பாதி—நிலவேம்பு, கடுகுரோகிணி, கோஷ்டம், ஓமம், வெப்பாலையரிசி. பூலாங்கிழங்கு, இவைகளைச் சமயெடை எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து முன்போல செய்ய முன்குணமுண்டாம். கொள்ளு என்ற தானியத்தை வறுத்து இடித்துச்சூர்ணம் செய்து அந்தப்பொடியை சரீரத்தில் முன்போல உபயோகிக்கவும். பசுஞ்சாணம் பழையதாக எடுத்துச்சூர்ணம் செய்து முன்போல உபயோகிக்கவும். உப்புச் சட்டியைத்தூள்செய்து முன்போல உபயோகிக்கவும், முன்குணமுண்டாம். விருத்தவாக்படர் கூறுவதாவது—ஓமம், வசம்பு சுக்கு, திப்பிலி, ஜீரகம், இவைகளைச் சமயெடை எடுத்துப்பொடி செய்து சரீரத்தில் தூவவேண்டும். கிராதாதி—நிலவேம்பு. கடுகுரோகிணி, கடுக்காய், திப்பிலி, கட்பலம், ஆகிய இவைகளின் பொடியை முன்போல செய்ய முன்குணமுண்டாம். விஷாதி—வத்ஸநாபி ஒரு பங்கு, மிளகு மூன்றுபங்கு, காட்டுக்சாணம் சாம்பல் 16 பங்கு இவைகளைக்கலந்து ஊமத்தை ரசத்தால் பாவனைசெய்து வெய்யிலில் காயவைத்துப் பொடிசெய்து அதை சரீரத்தில் தூவவேண்டும். கொத்துக்கடலை வறுத்துச் சமயெடை ஓமம் சேர்த்துப்பொடிசெய்து முன்போல உபயோகிக்க முன்குணமுண்டாம்.

குறிப்பு—சன்னிபாத ஜ்வரங்களில் மிகுந்த வியர்வை யுண்டாகும். சரீரம் வாழைத்தண்டுபோல சில்லிட்டுப்போகும். அப்பொழுது சரீரத்தின் உஷ்ணம் இயற்கையைவிடக்குறைந்துபோகும். அதை collapse stage என ஆங்கில வைத்தியர்கள் கூறுவர். அப்பொழுது இயற்கை உஷ்ண அளவைப பாதுகாக்க உள்ளுக்கும் மேலுக்கும் மருந்து உபயோகிக்க வேண்டும். கீழ் கூறப்பட்டுள்ள மருந்துகள் மேலுக்கு மாத்திரம் உபயோகப்படக் கூடியவை. இவற்றுள் கொள்ளை சட்டியில் வறுத்து இடித்துப் பொடிசெய்து அந்தப் பொடியை சரீரம் முழுவதும் தூவ வியர்வை குறைந்து [illegible] உஷ்ணம் திரும்பிவரும். இது நமது அனுபவத்தில் கண்[illegible]

210245

விருத்த வாக்படர் முறையும் அவ்விதமே அனுபவத்தில் க
முறை. இனி சன்னிபாதக்காய்ச்சல்களில் நாக்கில் தடவும் மரு
சொல்லப்படுகிறது. இதற்கு "தளம்" போடுதல் என்பார்.
வது காய்ச்சல்களில் நாக்கு மிகவும் வரண்டு தடித்து வெடி
சகிக்கமுடியாத வேதனையை யுண்டுபண்ணும். அக்காலத்தில்
களைத்தணிக்க நாக்கின் மேல்பூச்சு மருந்து சொல்லப்படுகி
கிஸ்மிஸ்பழத்தைத் தேன்விட்டரைத்து அந்த விழுதைக்கொ
நெய்சேர்த்து நாக்கின்மேல சற்று கனமாகப்பூச முன் சொ
வேதனைகள் நீங்கும். வேறு தளம்—தங்கம், முத்து, வெ
பவழம், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனம், சோகி என்கி
கரை, ருத்ராக்ஷம், இலுப்பை வைரம், பில்வவேர், கோஷ்
பேரீச்சம்பழம், வெள்ளைச்சாரணத்தி, திராக்ஷை, திப்பிலி, க
புத்ரஜீவி, மான்கொம்பு, தேத்தான்விதை, ஆமணக்குவேர், ந
வேர், கடுகு, நாயுருவி, சிகப்புச்சாரணத்தி, இவைகளில் ஒ
அல்லது இரண்டு திரவியங்களை தாய்ப்பாலில அரைத்து நாக்
தளமிட முன்குணமுண்டாம். குறிப்பு—தங்கம் வெள்ளி முதல்
வைகளை மெல்லிய ரேக்காக வாங்கி முலைப்பாலில் அரைத்து
போடவும். ருத்ராக்ஷம், மான்கொம்பு. தேத்தான்விதை ஆகி
இவை தமிழ் நாட்டில் வழக்கமாக உபயோகிக்கப்படும் மருந்து
இனி சன்னிபாதக்காய்ச்சல்களில் ஆகாரத் திற்காக கஞ்
சொல்லப்படுகிறது. பஞ்சமுஷ்டி யூஷம்—யவம், இ
லந்தைப்பழம், கொள்ளு, பாசிப்பயறு, முள்ளங்கி, ஆகிய இவைகள
ஓர் முஷ்டி எடுத்து எட்டுபங்கு ஜலம்விட்டு கொதிக்கவைத்
கஞ்சியாக உபயோகிக்க திரிதோஷஹரமாகும். குன்மம், சூல
சுவாஸம், க்ஷயம், இவைகளில் நன்மைசெய்யும். ஸப்தமுஷ்டி
ஷம்—கொள்ளு, யவம், இலந்தைப்பழம், பாசிப்பயறு, முள்ள
சுக்கு, கொத்தமல்லிவிதை ஆகிய இவைகளால் முன்போல தய
கப்படும் கஞ்சி ஸந்நிபாதஜ்வரங்களைப் போக்கும். குறிப்பு—
ளங்கிக்கிழங்கை பச்சையாக உபயோகப்படுத்தக் கூடாது. அ
பில்லையாக நறுக்கி உலர்த்தி வைத்துக்கொண்டு அங்கக்காய
வற்றலையே இங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். மற்ற இடங்
ளும் இந்த வற்றலையே உபயோகிக்கவேண்டும். ஸித்தார்த்தா
ரலேபம்—கடுகு, வசம்பு, பெருங்காயம், புங்கை, தேவதா